போர்ட் ஸெய்ண்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

JULY 17, 1923.

ந. 12 (6).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் ௵ ஜூலை ௴ 17௳. [விலை, 3 பை.

இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்ட்

ACT OF THE GOVERNMENT OF INDIA.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்ட்.

இந்தியா கவர்ன்மெண்ட்
சட்டநிரூபண இலாகா.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது 1923-ம் ௵ ஏப்ரல் ௴ 2௳ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

ACT No. XX of 1923.
1923-௵த்து 20-வது ஆக்ட்.

AN ACT TO GIVE EFFECT TO CERTAIN ARTICLES OF THE INTERNATIONAL CONVENTION FOR THE SUPPRESSION OF THE TRAFFIC IN WOMEN AND CHILDREN.

ஸ்திரீகளிலும் சிறுவர்களிலும் வியாபாரம் செய்வதை அடக்கும்பொருட்டு நானாதேசத்தார்கள் பரஸ்பரம் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கையின் சில பகுதிகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான ஆக்ட்.

ஸ்திரீகளிலும் சிறுவர்களிலும் வியாபாரம் செய்வதை அடக்கும்பொருட்டு நானாதேசத்தார்கள் பரஸ்பரம் செய்துகொண்டு, 1922-ம்வருஷம் மார்ச் மாதம் 28௳ ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்களின் சார்பில் ஜினீவாவிலே கையெழுத்து செய்யப்பட்டிருக்கும் உடன்படிக்கையை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக இந்தியன் பினல் கோடைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும் வழங்கத் தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்டை, இந்தியன் பினல் கோட் (திருத்துவதற்கான) 1923-ம் ௵த்து ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது - ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜெட்டில் விளம்பரமூலமாய் நியமிக்கக்கூடிய தேதியன்று செலாவணியாகத் தொடங்கவேண்டும்.

1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட் 366-வது பிரிவில் திருத்தம்.

2. ஷை கோட் 366-வது பிரிவுடன் அடியிற்கண்ட பாராவைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"மேலும், யாதொரு ஸ்திரீயை வேறொரு நபருடன் கள்ளப்புணர்ச்சி செய்யும்படி பலவந்தம் செய்யும் அல்லது மயக்கும் எண்ணங்கொண்டாவது அப்படி வெகுசாய் பலவந்தம் செய்யப்படுவாள் அல்லது மயக்கப்படுவாளென்று தெரிந்தாவது எவராகிலும் இந்தக் கோடில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி அநியாயமாய்ப் பயப்படுத்துவது மூலமாகவோ அதிகாரத்தை துர்வினியோகப்படுத்துவது மூலமாகவோ நிர்ப்பந்திக்கும் வேறே யாதொரு வகையாகவோ அவளை யாதொரு இடத்திலிருந்து வந்துவிடும்படி தூண்டினால், அவரும் மேலே கண்டபடி தண்டிக்கப்படத்தக்கவராவார்."

1860-ம் வருஷத்து 45-வது ஆக்டில் 366 A, 366 B பிரிவுகளைப் புதிதாய் அமைத்துக்கொள்வது.

3. ஷை கோட் 366-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவுகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அவையாவன :—

மைனராயிருக்கும் பெண்ணைக் கூட்டிக்கொடுப்பது.

"366 A. பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்டவளாய் மைனராயிக்கும் யாதொரு பெண்ணை வேறொரு நபருடன் கள்ளப்புணர்ச்சி செய்யும்படி பலவந்தம் செய்யும அல்லது மயக்கும் எண்ணங்கொண்டாவது அப்படி வெகுசாய் பலவந்தம் செய்யப்படுவாள் அல்லது மயக்கப்படுவாளென்று தெரிந்திருந்தாவது எவராகிலும் எவ்வித உபாயங்களை அனுசரித்தாயினுஞ்சரி அவளை யாதொரு இடத்திலிருந்து வந்துவிடும்படியோ யாதொரு காரியம் செய்யும்படியோ தூண்டினால், அவர்-பத்து வருஷத்துக்கு மேற்படாமல் காவல்தண்டனை விதிக்கப்படத்தக்கவராயிருப்பதுமல்லாமல், அபராதம் விதிக்கப்படுவதற்கும் உள்ளாவார்.

அன்னிய தேசத்திலிருந்து பெண்ணை இறக்குமதி செய்வது.

366 B. இருபத்தொரு வயதுக்குக் கீழ்ப்பட்ட யாதொரு பெண்ணை வேறொரு நபருடன் கள்ளப்புணர்ச்சி செய்யும்படி பலவந்தம் செய்யும் அல்லது மயக்கும் எண்ணங்கொண்டாவது அப்படி பலவந்தம் செய்யப்படுவாள் அல்லது மயக்கப்படுவாளென்று தெரிந்திருந்தாவது அவளை இந்தியாவுக்கு வெளியிலுள்ள யாதொரு தேசத்திலிருந்து கொண்டுவந்து ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் எவராகிலும் இறக்குமதி செய்தால் அவரும்,

அதே மாதிரியான எண்ணத்துடனாவது அதே மாதிரி தெரிந்திருந்தாவது தம்மாலாகிலுஞ்சரி வேறே யாதொரு நபராலாகிலுஞ்சரி இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் அப்படிப்பட்ட யாதொரு பெண்ணை இந்தியாவிலுள்ள யாதொரு சமஸ்தானத்திலிருந்து கொண்டுவந்து, அப்படிப்பட்ட எண்ணத்துடனாவது அந்தப்படி தெரிந்திருந்தாவது எவராகிலும் ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்தால் அவரும்,

பத்து வருஷத்துக்கு மேற்படாமல் காவல் தண்டனை விதிக்கப்படத்தக்கவராயிருப்பதுமல்லாமல், அபராதம் விதிக்கப்படுவதற்கும் உள்ளாவார்."

1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 2-வது ஷெட்யூலில் திருத்தம்.

4. 1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச் சட்டத்தின் இரண்டாவது ஷெட்யூலில், இந்தியன் பினல் கோட் 366-வது பிரிவுக்குச் சம்பந்தப்பட்ட பதிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பதிவுகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; அவையாவன :— 1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

366 A...	மைனராயிருக்கும் பெண்ணைக் கூட்டிக் கொடுப்பது.	வாரன்டிவ்வர்மல் பிடிக்கலாம்.	வாரன்ட்.	ஹாஜர் ஜாமீன் வாங்கக் கூடாது.	ராஜியாகக் கூடாது.	பத்து வருஷத்துக்கு இருவகைக் காவலில் ஒன்றில் வைப்பதுமல்லாமல் அபராதமும் போடுவது.	ஸெஷன் கோர்ட்டார்.
366 B...	அன்னிய தேசத்தி விருந்து பெண்ணை இறக்குமதி செய்வது.	வாரன்டில்லாமல் பிடிக்கலாம்.	வாரன்ட்.	ஹாஜர் ஜாமீன் வாங்கக் கூடாது.	ராஜியாகக் கூடாது.	பத்து வருஷத்துக்கு இருவகைக் காவலில் ஒன்றில் வைப்பதுமல்லாமல் அபராதமும் போடுவது.	ஸெஷன் கோர்ட்டார்.

எல். க்ராஹம்,

இந்தியா கவர்ன்மென்ட் அபிஷியேடிங் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,

Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.